## 2015 – அ.தி.மு.க. ஆட்சி போன்று இல்லாமல் 'மிக்ஜாம்' புயலை எதிர்கொண்டதில்

# தி.மு.க. அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை - பெரும்சேதம் தவிர்ப்பு!

## 'தி இந்து' ஆங்கில நாளிதழ் பாராட்டு!

சென்னை, டிச.11-

**முந்தைய 2015 அ.தி.மு.க ஆட்சியைப் போன்று இல்லாமல் மிக்ஜாம் புயல் வெள்ளத்தின் போது தி.மு.க. அரசு மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக பெரும் சேதங்கள் - உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டதாக 'தி இந்து' ஆங்கில நாளிதழ் சிறப்பு கட்டுரையில் பாராட்டு தெரிவித்துள்ளது.**

நேற்றைய 'தி இந்து' ஆங்கில நாளிதழில் ரம்யா கண்ணன் எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு:-

மிக்ஜாம் புயலால் டிச. 2 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் கொட்டித் தீர்த்த கனமழை 47 ஆண்டு கால வரலாற்றில் வந்திராத பெருமழையாகும்.

இந்தப் பெருமழை மற்றும் வெள்ளம்; எல்லோரையும் 2015-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி இருந்த போது, இதேபோன்ற ஒரு பெரும் வெள்ளம் வந்ததை நினைவு படுத்தியுள்ளது. 8 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அந்தப் பெரு வெள்ளத்தில் இருந்து நாம் ஏன் இந்தப் பாடத்தை கற்றுக்கொள்ளத் தவறிவிட்டோம் என்ற கேள்வியையும் மக்கள் மனதில் அது, எழுப்பும். ஆனால் இந்த 2 வெள்ளத்திற்கும் மிகப் பெரிய வித்தியாசம் உள்ளது.

**2015-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் என்பது, மழையோடு மனிதத் தவறினாலும் ஏற்பட்ட பெரும் வெள்ளம் ஆகும். ஆனால், 2023-ல் தற்போது ஏற்பட்ட வெள்ளம் முழுக்க முழுக்க இயற்கைப் பேரிடர் ஆகும். இந்த மிக்ஜாம் புயல் மற்றும் பெரும் மழைக்கு முன்னர் அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்ததினால் - முக்கியமாக செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து மழைக்கு 3 நாட்களுக்கு முன்பிருந்தே அளவாக தண்ணீரை வெளியேற்றியதால் பெருமளவு உயிர்ச் சேதமும், பொருள் சேதமும் தவிர்க்கப்பட்டுள்ளது.**

மிக்ஜாம் புயல் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் முன்கூட்டியே விரிவான தகவல்களை அறிவித்திருந்தது. அதாவது, புயலின் வேகம், அது நகர்ந்து வரும் பாதை, புயல் கடக்கக்கூடிய விதம் ஆகிய விவரங்களை கணித்துக் கூறியிருந்தது.

ஆனால், கணிப்புகளுக்கு எல்லாம் அப்பால் மிக்ஜாம் புயலானது, கிட்டத்தட்ட 16 மணிநேரம் சென்னைக்கு அருகிலேயே மையம் கொண்டு மிகக் குறைவான வேகத்தில் நகர்ந்ததால் சென்னையில் 24 மணிநேரமும் பெருமழை பெய்தது.

2015-ஆம் ஆண்டு மழை பெருமளவில் பெய்தது. அப்போது சென்னை வெள்ளத்தில் மூழ்கியது என்பது, திடீரென்று செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து தண்ணீரை அதிகப்படியாக வெளியேற்றியதால்தான்.

அடையாறு செல்லும் பகுதிகள் முழுக்க வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியது. தற்போது மிக்ஜாம் புயல் குறித்து முன்கூட்டியே கணிப்புகள் வெளியானதால் அரசுக்கும், மக்களுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திட போதிய அவகாசம் இருந்தது. இந்தக் கணிப்புகள் வெளியானவுடன் தமிழ்நாடு அரசு விரைந்து செயல்பட்டு, தேவையான அனைத்து



முன்னெச்சரிக்கை நடவடிக்கைளையும் எடுத்திருந்தது.

பேரிடர் மீட்புக் குழுக்களை அரசு தயார் நிலையில் வைத்திருந்து, இந்தப் பேரிடரை எதிர்கொள்ள என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தது. இதுதவிர மருத்துவக் குழுக்களையும், பொதுமக்களை வெள்ளத்தில் இருந்து பாதுகாக்க பாதுகாப்பு மையங்களையும் தயார் நிலையில் அரசு வைத்திருந்தது.

மழை வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பின்பு அரசின் மீட்பு நடவடிக்கைகளும் சிறப்பாக நடைபெற்றது. ஆனால், சென்னையின் பல பகுதிகளில் முக்கியமாக தென் சென்னை மற்றும் தென்மேற்கு சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்து மக்கள் பால், குடிநீர் மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்காகச் சிரமப்பட்டனர். இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது அரசின் கடமையாக இருந்தாலும், மக்களும் தங்களுக்குத் தேவையான பொருட்களை முன்கூட்டியே வாங்கி வைத்திருந்திருப்பார்களேயானால் இந்தச் சிரமத்தை ஓரளவுக்கு தவிர்த்திருக்கலாம்.

> **அப்போது இருந்த அ.தி.மு.க. அரசு இந்த ஏரியைத் திறந்து விடுவதற்கு முன்பு மக்களிடம் எந்தத் தகவல்களையும் தெரிவிக்கவில்லை. இதனால் உயிர்ச் சேதம் பெரும் அளவில் ஏற்பட்டது. ஆனால் தற்போது தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினாலும் செம்பரம்பாக்கம் ஏரியில் ஒவ்வொரு நாளும் அளவோடு தண்ணீர் திறக்கப்பட்டதாலும், உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் தவிர்க்கப்பட்டது.**

ஆனால் இந்த மிக்ஜாம் புயல் மற்றும் பெருமழையில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், உயிர்ப் பலி பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளது. 2015-ஆம்



Chennai under water: 2015 vs 2023

Over the past weekend and beyond, cyclone Michaung left a trail of destruction, similar in many ways to what had happened in the city in 2015. Ramya Kannan examines what was done right and where we slipped

Hindsight is an excellent teacher, but as pupils, do we remember the lessons taught eight years ago? Comparisons are anathema, but sometimes they are a measure of what has been done right and what more needs to be done, to minimise damage – loss of life and property – and the sufferings of people. While extreme weather events have become more common than in the past across the world, their impact strikes harder when closer home, naturally. Only eight years ago did Chennai have a terrible northeast monsoon; several weather events in November and December set the bar low for Chennai, as extensive devastation wrecked most parts of the city. As a result, every monsoon will invoke the spirit and memories of 2015, every spell of massive rain/flooding in the city will be compared to the dark days of 2015.

We could have allowed hindsight to gain an advantage this time, with cyclone Michaung. Maybe we did, in some ways, in some parts of the city. But Michaung, too, as different as it was from the rain of 2015, affected the city in eerily similar ways.

In contrast to 2015, the initial volunteer response to pleas for relief was sluggish. This could be due to compassion fatigue, as the same teams have been working on one thing after another, right

camps, and readied its shelters to accommodate homeless people.

Preparing for floods

But did everyone prepare adequately? People in the south and western suburbs were left inundated for days, and had run out of water and supplies, especially milk powder for babies, even from the second day. While it was, no doubt, the duty of the government to address this demand, better preparations, particularly in areas prone to flooding, must be part of the household checklist in future. The government's response after the floods was patchy at best. Pockets of north Chennai and the south and south-western suburbs received very little assistance, residents claimed, and were left unattended to mostly. Another sore point among people was that elected corporators and people's representatives, besides political party workers (with notable exceptions), arrived but too late on the scene and with too less.

Reservoir discharge

The single most crucial factor which ensured that the loss of life was minimal, in comparison

ஆண்டு வெள்ளத்தை ஒப்பிடும் போது இந்த அரசு சிறப்பாகச் செயல்பட்டது என்று கூறுவது மிகையாகாது.

2012-ஆம் ஆண்டில் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து ஒரே இரவில் பெருமளவில் தண்ணீர் திறக்கப்பட்டு அடையாறு ஆற்றில் விடப்பட்டதால் பல நூறு மக்கள் இறந்து போனார்கள். அடையாறு ஆற்றில் விடப்பட்ட தண்ணீரின் அளவு அதன் கொள்ளளவை விட பல மடங்கு அதிகமாக இருந்ததால் சென்னையில் அடையாறை ஒட்டியுள்ள பல பகுதிகள் 2015-ஆம் ஆண்டு மூழ்கின.

தொடர் மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் ஒரு பக்கம் இருந்தாலும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து அடையாறில் அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட பாதிப்பே 2015-ஆம் ஆண்டு வெள்ளம் மக்களை பெரும் துன்பத்திற்கு ஆளாக்கியது.

அப்போது இருந்த அ.தி.மு.க. அரசு இந்த ஏரியைத் திறந்து விடுவதற்கு முன்பு மக்களிடம் எந்தத் தகவல்களையும் தெரிவிக்கவில்லை. இதனால் உயிர்ச்சேதம் பெரும் அளவில் ஏற்பட்டது. ஆனால் தற்போது தமிழ்நாடு அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளினாலும் செம்பரம்பாக்கம் ஏரியில் ஒவ்வொரு நாளும் அளவோடு தண்ணீர் திறக்கப்பட்டதாலும், உயிர்ச் சேதமும், பொருட் சேதமும் தவிர்க்கப்பட்டது.

வடகிழக்குப் பருவமழைக்கு முன்னரே தமிழ்நாடு அரசு அடையாறு ஆற்றின் ஓரங்களில் இருந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்திடும் பணிகளைச் செய்தது. அந்தப் பணி, இந்த ஆறுகளில் வெள்ள நீர் வடிவதற்கு வசதியாக இருந்தது. இத்தனை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்தும் அது முழுப் பயன் தரவில்லை. ஏனென்றால் தற்போது மழையானது 24 மணி நேரம் இடைவிடாது பெய்தது. இந்தத் தொடர் மழையால் சாலைகள் வெள்ளக்காடாக மாறின.

அதே சமயம் மிக்ஜாம் தாக்கத்தால் கடல் சீற்றமும் ஏற்பட்டது. இதன் விளைவாக எழுந்த ராட்சத அலைகள்; வெள்ள நீர் கடலில் கலப்பதைத் தடுத்து நிறுத்தியது. ஆனால் இந்த நிலைமை திங்கட்கிழமை இரவு மழை விட்ட பிறகு சீரானது.

**திங்கட்கிழமை இரவுக்குள் சென்னையில் முக்கியச் சாலைகளில் தேங்கிய மழைநீர் பெருமளவில் வடியத் துவங்கியது. சென்னை மாநகராட்சி சார்பில் சமீபத்தில் 2021-ஆம் ஆண்டுக்குப் பிறகு சென்னை மாநகராட்சி சீரமைத்த மற்றும் புதியதாகக் கட்டப்பட்ட மழைநீர் வடிகால்வாய்கள், தற்போது பெருகிய வெள்ள நீரை வெளியேற்றுவதில் பெரும் உதவியாக இருந்தன.**

இந்த மழைநீர் வடிகால்வாய்கள் - 40 முதல் 45 செ.மீ. வரை செய்த பெரு மழையால் பெருகிய வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு உதவின. இதனால் சென்னையில் பல பகுதிகளில் மக்கள் விரைவில் இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளனர். ஆனாலும், தென்சென்னை மற்றும் தென்மேற்கு சுற்றுப்புறங்க ளிலும் பழைய மாமல்லபுரம் சாலை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளிலும் வெள்ள நீர் இன்னும் தேங்கியுள்ளது. இந்தப் பகுதிகளில் விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள், நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடங்கள், வடிகால் மற்றும் கால்வாய்களை அடைத்து ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்புகள் ஆகியவையே இந்தப் பாதிப்புகளுக்கு முக்கியக் காரணம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வாறு அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### துறைமுகம், ஆர்.கே.நகர் பெரம்பூர் தொகுதிகளில்

## பாதிக்கப்பட்ட 12,000 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

### அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் , பி.கே. சேகர்பாபு வழங்கினர்!

*சென்னை, டிச.11-*

*முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட வடசென்னையை சேர்ந்த துறைமுகம், ஆர்.கே.நகர் மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி மக்களுக்கு நேற்று முன்தினம் (09.12.2023) அமைச்சர்கள் கேஆர்.பெரியகருப்பன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் நிவாரணப் பொருட்களை வழங்கினர்.*

*மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தமிழக அரசும், மாநகராட்சி நிர்வாகமும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மழைநீர் வெளியேற்றுதல், உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய் தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன. அந்த வகையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (10.12.2023), சென்னை, கொத்தவால்சாவடி, ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி மகளிர் கலை கல்லூரியில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட மாநகராட்சி, 57வது வார்டைச் சேர்ந்த பிராட்வே, அண்ணா பிள்ளை தெருவில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட 1,000 குடும்பங்க ளுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைளை வழங்கினார்.*

*அதனைத் தொடர்ந்து, அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் ஆர்.கே. நகர் சட்டமன்ற தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, 47வது வார்டில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளான மீனம்மாள் நகரில் 2500 குடும்பங்களுக்கும், காமராஜர் நகரில் 1500 குடும்பங்களுக்கும் அரிசி, பால், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்கினர்.*

*அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் மற்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பெரம்பூர் சட்ட மன்றத் தொகுதியைச் சேர்ந்த பெரம்பூர் டீச்சர்ஸ் காலனி, மேல்பட்டி, மேயர் கிருஷ்ணமூர்த்தி நகர், மூர்த்திங்கர் தெரு ஆகிய இடங்களில் மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, 36, 44, 45 மற்றும் 46 வார்டுகளைச் சேர்ந்த 7,000 குடும்பங்களுக்கு அரிசி, பால், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் போன்ற நிவாரணப் பொருட்களை வழங்கினர்.*

*இந்நிகழ்ச்சிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.பி.நந்தகுமார் (அணைக்கட்டு), ஜெ.எபிநேசர் (ஆர்.கே.நகர்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), மாநகராட்சி நகரமைப்புக்குழுத் தலைவர் தா.இளைய அருணா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் ப.ஸ்ரீராமுலு, நேதாஜி யு.கணேசன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின், ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, திருமதி.எஸ்.ஆனந்தி, திருமதி சர்ப ஜெயதாஸ் மற்றும் எஸ்.முரளி, பாகீர்பாய்,ரெயின்போ விஜயகுமார், ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.*



திரு.வி.க. நகர் தொகுதிக்கு நியூபேரன்ஸ் சாலை 1வதுதெரு, ஸ்டாரன்ஸ் ரோடு 1வது தெரு, கெனால் சந்து, பழைய வாழை மாநகர், மற்றும் அந்த வட்டத்தில் உள்ள திருநங்கைகளுக்கு புயல் மழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்காக அமைச்சர் மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் ஏற்பாடு செய்து அனுப்பி வைக்கப்பட்ட புயல் மழை நிவாரண பொருட்களை கழக துணை அமைப்பு செயலாளருர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. வார்டு எண் 73 ல் உள்ள மழையால் பாதிக்கப்பட்ட பழைய வாழை மாநகர்,ஸ்டாரன்ஸ் ரோடு 1வது தெரு, கெனால் சந்து, நியூ போரன்ஸ் ரோடு 1வது தெரு, மற்றும் அந்தப்பகுதியில் உள்ள திருநங்கைகளுக்கு நேரில் சென்று வீடு வீடாக வழங்கினார். உடன் பகுதி செயலாளர் எம்.சாமிக்கண்ணு, வட்டச்செயலாளர் தமீம்பாய், மூவேந்தன், கிருஷ்ணா, நல்லத்தம்பி,ராஜ்குமார்,எத்திராஜ், அப்பு,சசிகலா,குலாப், தனலட்சுமி, ஐடி விங் கௌதம், சுரேந்திரன், வாழை மாநகர் குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகள், கோவிந்தராஜ், சந்திரபாபு, துரை விசிக திலகராஜ், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

### அண்ணாநகர் டவர் கிளப் தேர்தல்: தலைவராக

## டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. மீண்டும் தேர்வு!

*சென்னை, டிச. 11 -*

*அண்ணாநகர் டவர் கிளப் தேர்தலில் கழக அயலக அணித் தலைவரும், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் கலாநிதி வீராசாமி இரண்டாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*சென்னை அண்ணாநகர் டவர் கிளப்பில் நடைபெற்ற தேர்தலில் இரண்டாவது முறையாக வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராச்சாமி மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*





நீலகிரியில் நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட கனமழையால் குன்னூர் பர்லியார் சாலையில் ஏற்பட்ட நிலச்சரிவு பகுதிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சுற்றுலாத் துறைஅமைச்சர் கா.ராமச்சந்திரன் நேரில் பார்வையிட்டு உடனுக்குடன் மண் மற்றும் பாறைகளை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொண்டார்.